1984 மார்ச் 15]

போகக் கூடாது என்று நாம் ஆணை பிறப்பித்து அதற்கும் அவர்கள் ஒப்புதல் தந்து, 4—2—1984-க்குள் தங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று நாம் அவர்களிடத்தில் சொல்லி இருக்கிறோம். ஆகவே ஆயிரம் கிலோவிற்கு மேலே வைத்திருப்பவர்கள் தங்கள் இருப்புகளைத் தெரிவித்தால் தான் சட்டப்படி அவைகளைக் கணக்கிட முடியும். ஆகவே சேமித்து வைத்து விலையை ஏற்றுவதற்கு வழி செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்குத் தான் அந்தத் தடை விதிக்கப் பட்டுள்ளது. ஒரளவிற்கு அகில இந்திய அளவிலே தேயிலை யினுடைய விலை கூடாமல் இருப்பதற்கு, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மத்திய அரசு வற்புறுத்தியதன் பேரில் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை பயிரிடப்படும் போதே ஒரு குத்து மதிப்பாக கணக்குப்போட்டு அதற்கு முன்பணம் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? தேயிலை மூலம் அன்னியச் செலாவணி நமக்கு எவ்வளவு கிடைக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. முன் பணம் கொடுக்க இயலுமா என்பதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் நிலைமைகளை ஆராய்ந்து பதில் தர இயலும்.

எண்டியூரில் கூட்டுறவுக் கிடங்கு கட்டும் திட்டம்.

328—(*வினா எண். 18807)— திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி எண்டியூரில் கூட்டுறவுக் கிடங்கு கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ): திண்டிவனம் தொகுதி எண்டியூரில் கூட்டுறவுக் கிடங்கு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை. எண்டியூர் கூட்டுறவு விவசாய சேவை சங்கம், கிடங்கு கட்ட அடிமனை வாங்கியபின், கிடங்கு கட்ட பிரேரணை அனுப்பினால் அதுபற்றி பரிசீலிக்கப் படும்.